**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.45/2017</u>**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 23.01.2020**

**பெயர் - ராஜ் கமல்**

**த/பெ - நேசமணி**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -12.07pm**

**<u>முதல் விசாரணை -</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணபத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 29.4.1974 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 1 ஆகவும். கணினி பட்டா எண் 105 வாசா ஆ 2 ஆகவும். 4.2.2008 தேதியிட்ட கிஸ்து ரசீதின் அசல் வாசா ஆ 3 ஆகவும். 30.10.2013 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் வாசா ஆ 4 ஆகவும். 21.7.2015 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வாசா ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**விசாரணை முடியும் நேரம் -12.09pm**